63

அறிவோம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஸ்ரீ கௌதமபுத்தரைப்

பற்றிய

மருட்துவேஷ சங்குல தர்ப்பணம்.

(முதற்பாகம்)

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 3 JUL 1914 MADRAS.

இஃது

சேலம் G. அப்பாதுரையாரால்

ஸ்ரீமத் C. குருசாமியார் சாஸன தாயகா

அவர்களது பொருளுதவியைக்கொண்டு

பிரசுரிக்கப் பட்டது.

சென்னை மெர்குரி பிரஸ் மஹா விகடதூதன் ஆபீஸ்.

(ஜூன்மீ 1914வரு)

[illegible]தன் விலை அணா 1.

94:31
N14
17636

அறிவோம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஸ்ரீ கௌதம புத்தரைப்

பற்றிய

மருட்துவேஷ சங்குல தர்ப்பணா.

(முதற்பாகம்)

OFFICE OF THE REGISTRAR
REGIST...
3 -JUL 1914
MAD...

இஃது

சேலம் G. அப்பாதுரையாரால்

ஸ்ரீமத் C. குருசாமியார் சாசன தாயகா

அவர்களது பொருளுதவியைக் கொண்டு

பிரசுரிக்கப்பட்டது.

சென்னை, மெர்குரி பிரஸ்—மஹாவிகடதூதன் ஆபீஸ்.

(ஜூன்௴ 1914-௵)

இதன் விலை அணா 1.

நூல் வரலாறு.

தண்டமிழ் வாணர்காள்! நோக்குமின்:—

இரங்கூனம்பதி ரு. இரங்கசாமி ராஜா அவர்கள் பொருளுதவியால் திருமயிலை P. M. சுவாமியென்பார் "கௌதம புத்தரை இயேசுகிறிஸ்து நாதர் முகம்மது நபிகளோடு ஒப்பாகக்கூறலாமா" வென்னும் முகப்புத்தீட்டி வெளியாக்கியுள்ளத் துண்டுப்புத்தகமொன்றை நண்பரொருவ ரனுப்பக் கைவரப்பெற்றோம். இப்புத்தகத்தின்கண் போதரும் விடயங்களைச் சிறிது பொறுமையோடு, அபிமானரஹிதராய்க் கண்ணுற்றதில் "திருமயிலை P.M. சுவாமியென்பார்" பண்டைய நூற்கியான மற்றவராயும் "பகுசேஷ்டித்" தென்னுங், "க்ரூபவாதியாயும்" பிரகாசிப்பதை (ஐயையோ) அடுத்ததுகாட்டும் பளிங்குபோன்று இவர்பிரதிவாதித்தப் புன்னூலே தேற்றமாக்குகிற தெனினும் ஒருதலைப்பற்றின் றுள்ளங்கோடி,

> "காய்தலுவத்தலகற்றி யொருபொருட்கண்
> ஆய்தலறிவுடையார்க் கண்ணதே"

என்னும் நான்மணிக் கடிகையாரது நல்லுணர்வுநீத்து நியாய வரம்பைக்கடந்து மனம்போனவாறு குளறிவழிந்துளதை நோக்குழி,

> "மாற்றாராய் நின்றுதம் மாறேற் பார்க்கேலாமெ
> யாற்றாமெ யென்னு ரறிவுடையோர்-ஆற்றாமெ
> நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற்றாமவரைப்
> பேர்த்தின்னா செய்யாமெநன்று"

என்பதற்கொக்க திருமயிலை P M. சுவாமியென்பாரது அசைக்குங் கர்ண கடூரமானகொடூர மொழிகளைப் பதருரையென்றகற்றி மருண் மதியால் புத்தராற்றலறியாது மயங்குதற்கேற்பதோர் மாண்பொருள் வழுத்தப்புகுந்த வின்னூலின்கண் "மருள்" என்பன, திருமயிலை P. M. சுவாமியென்பாரது "மயக்குரை" யெனவும் "தெருள்" என்பன எமதுவிடைகளுமாமெனக்கொள்க.

G. அப்பாதுரையார்
சாம்பியன் ரீப்ஸ்
K G. F.

ஸ்ரீ கௌதம புத்தரைப்

பற்றிய

மருட்துவேஷ சங்குல தர்ப்பணம்.

மருள்:—நிலவுலகில்பற்பல சமயங்களுள.... இச்சமயங்களைப் பொதுவாக நோக்குமிடத்து கடவுளையடையும் மார்க்கம் அல்லது வழி பேதமுற்றிருக்கினும் கடவுள் ஒருவர் உண்டெனுங் கொள்கை யுடையார் ஒரு சாராரும், இதற்கெதிர் (பதம்) ஒன்றுவேண்டுமாகையால் கடவுள் இல்லையெனுங் கொள்கையுடைய ஒரு சாராரும் ஆக இரண்டுவகையாகப் பிரிக்கப்படும்.

தெருள்.—கடவுள் ஒருவன் ஒருவரெனக்கூறுங் கணிதவிலக்கணம்; ஒன்றிரண்டு மூன்று நான்கென்னுங் கணித விலக்கத்தைத் தொடரா தொழியாவாயினும் "ஒரு கடவுள்" உண்டெனும் நிலையூர்ஜ்ஜிதமாயின் பல கடவுட்டோன்றும் பாங்கிரா; பாங்குறினும்; பற்பலக்கடவுள் துவேஷமிரா. துவேஷத்தால் கடவுளைத் தொழுவதால் சாந்தமிரா; இத்தியாதி கேடுகளுள் "ஆதிகடவுள்" என்னும் மொழிவழுவி, "பொருகடவுள்" என்னும் மொழியைத் தழுவிக்காற் பொருளற்றப் பலகடவுள், உருவற்றப்பல கடவுள், உருவுற்றப்பல கடவுள் தோன்றி பாழாயின

'கவ்வுண்டு நாசிமுனை காலால் சனலெழுப்பி
வவ்வுதனை யொவ்வாக்க வாட்டாமல் தெய்வம்
ஒருவனேயென்பார் ஒன்றுநூறாகித்
திரிவரே வீணேதினம்-'

எனக்கூறியுள்ள இவற்றைக்கொண்டே கடவுள், ஒருவன் ஒருவரெனுந் தாண்டவத்தை யொழிக்க விடமுண்டென்பதைக் காண்க. கடவுள் இல்லையெனும் ஒரு சார்பாரை மீண்டு விசாரிக்க வெடுத்துக்கொண்டால் "உள்ளக் கடவுளை" இல்லையென்கின்றனரோ? வென்னுங் கடாநிகழுழி, உள்ளதையில்லையென்ப யாண்டும் பொருத்த முடைத்தன்றாகலின், இல்லதையே இல்லையென்பரெனின், யாதில்லையென்னுங் கடாவுக்குவிடை யாதுரைப்பாரோ?

தத்தம பாவத்திற்குத் தாந்தாம் பிரதியோகியாகிய
தத்த முணர்ச்சிப் பெற்றாலன்றி
தத்தமபாவ வுணர்ச்சி பெறற்படா தென்பது:—

தர்க்க நூற்றுணிபாதலின் இல்லதை இல்லையெனல் இழுக்காம் இல்லாதுயாது "கடவுள்" என்புழி, உள்ளது யாண்டுமபாவமுறைவதன்றாகலின், இக்கூற்று:—எதிரிக்கிசைந்தது கூறல் என்னும் பக்கப்போலியா மென்றறிதி, அறிதி.

மருள்.—ஆனால் இவற்றையெல்லா மொருங்கே அங்கீகரிக்குந் தன்மையுடையது இந்துமத மொன்றேயாம். இதனை சீர்திருத்தஞ் செய்யவெழுந்த ஆசாரிய ரொவ்வொருவரும் மேலும் மேலும் இதற்குப் பிரகாசத்தை யூட்டினார்கள்.

தெருள்:—இவ்விதமே ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் பொய்யையும், மெய்யையும், உளதென்பதையும், இலதென்பதையும் ஒருங்கே அங்கீகரிக்குந் தன்மையுடையது இந்துமதமாயின், அவ்விந்து மதத்தை அநுசரிப்போரின் விவேகமும், இந்துமத ஆசிரியர்களின் பேரறிவின் பிரகாசமும் எத்தகையதென்பதை களங்கங்களைந்து கருத்துணருங் கலைவாணர்களே, கவனிப்பீர்களாக.

மருள்:—இவ்வாறெழுந்த ஆசிரியர்களின் பெயராலிது வழங்கப்படவேண்டுமோ வென்றால் அதுமுற்றுங் கூடாமை. ஏனெனில் ஒரு மனிதன் எவ்வளவு ஞானாரகிதனாயினும் அவன் "கற்றதுகைமண் கல்லாதுலகளவு" ஆகவே இச்சொற்ப ஞானத்தாலவனேற்படுத்தியது முழு உலகத்திற்கும் பொருந்தி ஞானமுடையதாயிராது.

தெருள்:—இங்ஙனமாய கொள்கையுடைய இவர்க்கு கிறீஸ்து மகம்மது மார்க்கங்கள் யாங்ஙனே உடன்பாடுடைத்து. இது "முன்னொடுபின் மலைதலாம்" புத்தம், கிறீஸ்து, மஹம்மது என்னும் முப்பெரு மதங்களே சற்றேறக்குறைய உலகமடங்கலு மங்கீகரித்துளதென்ப பிரத்தியக்ஷமாகப் பிரகாசிக்க ஓராசிரியர்பெயராலேற்படுத்தியது முழுவுலகத்திற்கும் பொருந்திய ஞானமுடையதாயிராது, எனுமிவர் கூற்று யாண்டையதென்கலாம்? அங்

தோ! ஓராசிரியன் பெயராலும் சூசித்தேற்படுத்தி யிராத இந்து மதம், முழுவுலகத்திற்கும் பொருந்திய ஞானமுடையது, என்பதே இவரது கூற்றுபோலும், விபரீதம் விபரீதம்.

மருள்:—இந்து மதத்திலுதித்த அநேக ஆசிரியர்களும் தத் தங்களுக்கு எவ்வெவ் விஷயங்கள் கசடின்றி (சுலபமாக) உணர்ந்து பிரகாசிக்க நேர்ந்ததோ அவ்விஷயங்களின் மாறுபாடுகளை ஷெ சமயத்திலிருந்து நீக்கித்தங்கள் போதனை ஞானங்களையணி கலனுக்கி வைத்தார்களென்றால் அதன் பெருமையை கூறவுங்கூடுமோ.

தெருள்:—ஐயையோ இந்துமத ஆசிரியர்கள் தங்கள் போதனை ஞானங்களால் இந்துக்களுக்கு அணிகலனுக்கி வைத்ததென்னையெனின், முண்டிநாமம், தீவிட்டி நாமம் (வடகலை தென்கலையென்ப) குழைத்து பூசும் விபூதி, குழைக்காது பூசும் விபூதி; ஆறுமுகங்கொட்டை கையிலும், ஏழுமுகங்கொட்டை கண்டத்திலும், ஒன்பதுமுகங் கொட்டை தலையிலுங்கட்டுதல்;—காவடி காக்சிந்திர்தல், பருத்திநூல்பூநூல், இன்னுன் அணியவேண்டும், ஜனப்பநூல் பூநூல் இன்னுன் போடவேண்டும் என்பவைகள், பிறர்பொருளைக் களவாடல், முறையின்றி மகளைக் கற்பழித்தல் சோமபானம்; சுராபானம் முதலிய மயக்க வஸ்துகக்களையருந்தல் புண்டரீக யாகஞ்செய்து பெண்களை போகித்தல், சத்தியாகஞ்செய்து மிருகாதிகளைப்போல் புணர்தல், முதலிய தீநெறிகளை விளக்கி யுள்ளார்களன்றி, அறநெறி யொருசிறிதுங் காண்டற்கரிதேயென்பதை இந்துமத புராணுதியிதிகாஸ ஸ்மிருதிகளிற் காணலாம்.

மருள்.—ஆனல் தற்காலத் தெழுந்துள்ள வாசகங்களோ, அவற்றை (புத்தர் போதனையைத்) தாழ்மாருக்கி இடையிடையே அநந்தமான கேள்விகளை யெழுப்பிக் கொண்டதை யுணராமல் புறச்சமயங்களைக் காரணந்தெரியாது நிந்திக்கத் தலைப்பட்டதினூலும் புத்தர் போதித்ததாகப் பெரும் ஆபாஸ விஷயங்களைச் சேர்த்துக் கல்பிதஞ் செய்வதை யொழிக்கும் பொருட்டாகவும் இச்சிறு புத்தகம் எழுதப்பட்டது.

தெருள்.—இங்ஙனமிவர் எழுதியதாகக் கூறுமிச்சிறு புத்தகத்துள் புத்தர் போதனையின்னது, அவற்றிற் காதாரமின்னது அதை மாறுக்கியது இன்னதென்றும், புறச்சமயங்களை காரணந் தெரியாமல் நிந்தித்துள்ளது இன்னது அவற்றிற்குகாரணமின்னதென்றும், புத்தர் போதித்ததின்னது புத்தர் போதிக்காதபெரும் ஆபாஸமின்னதென்றும் கற்பனையின்னது, கற்பிதமின்னதென்றும் ஒரு சிறிதும் வரைந்தில்லாதிருந்தும் வீணே இன்னனையவோர் முகவுரையெழுதி விடுத்துளது விந்தையே. அன்றியும், புத்தமார்க்கத்தை கிறிஸ்து மஹம்மது மார்க்கங்களோடு ஒத்திட்டுக்கூறுதல் பேதமையென்றும் கிறிஸ்துவானவர் தமது பன்னிரெண்டாம் வயதிலே ஜெருஸலேம் தேவலாயத்தின் சாஸ்திரிகள் தியங்கும்படியான ஞானம் வாய்ந்தவராயிருந்தாரென்றும், தன்னையறிந்து தலைவனையறிந்தாரென்றும் இன்னனைய பலவிடயங்களை வரைந்து, புத்தர் இத்தகைய விஷயஞானரஹிதரென வீண்சங்கை தொடுத்துள்ளவையை விலக்குவாம்.

மருள்:—புத்தர் தன்னையறிந்தாரென்று சொல்லயாதும் இடமில்லை.....வீட்டின் சாளரங்களிலமைக்கப்பட்டக் கண்ணாடியானது ஒரு புறத்திலிருக்கின்ற சூரியனுடைய கிரணத்தை வாங்கியின்னொரு புறத்தில் வெய்யில் போன்ற ஒளியைத்தருவது போன்றும். இது தன்னிற்றனே சொந்த ஒளியையுடையதன்று, எனிவ்வாறு கூறவந்தீரென்றால் இப்புத்தர் தன்னில் தானுணர்ந்தாரென்னுங் குறியிவரிடத்தில்லை யென்ப. அவ்வாறறிந்திருப்பரேல் தன் தலைவனையுணர்ந்திருப்பாரன்றே.

தெருள்:—தலைவன் என்னும் விடயத்தில் இவரது ஞானம் மிக்கப் பக்குவ ரஹிதமானதேயாம். 'தலைவன்' என்னும் பதத்தைப்பற்றிய பொருளை கலைக்காவியங்களாகும் கசடகற்று நூற்களைக் கொண்டேனும், சற்குரவரை நண்ணியேனும் நற்பொருளுணர்ந்திருப்பரேல்:—

"தன்னிலைக் கட்டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலை கலக்கிக் கீழிடுவானு நிலையினும்
மேன் மேலுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலைபாசச் செய்வானுந் தான்"

என்னும் பெரியாரது பேருரையினாற்ற லெளிதிற் புலனாம்.

“முனிவரு முயன்றுவான் கண் மூப்பிகந்
துடைய விர்ப
கனிகவர் கண்ணு மேத்தக் காதிக
ணறிந்த சாசித்
தனிமுதற் கடவுட் கோயிற்றான் வலங்
கொண்டு செல்வான்
குனிதிரை முளைத்த வெய்யோன் குன்றுசூழ்
வதனை யொத்தான்.”

என்றான்றோர் போற்று மருகபரனே, புடவியின் போத புகழ் மெய்யாளன் என்றறிதலெளிது. அந்தோ பாஸஜாலமாம் பிறவியினகத் துழன்று, விப்பக்க நெறியடைந்த விஜ்ஜா தோற்றவநித்திய சஹித, பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடெனுமந்தகார சகடக்காலிடைப்பட்டு துக்கவாருதியிலுழல்வ தென்னோ?

“பேதமெ யென்னும் வித்திற் பிறந்துபின்
வினைக ளென்னும்
வேதனைமரங் கஞறி வேட்கை வேர்
வீழ்த்து முற்றி
காதலுங் களிப்பு மென்னுங் கவடு
விட்டவலம் பூத்து
மாதுயரிடும்பைக் காய்த்து மரணமே
கனிந்து நிற்கும்.”

என்பதாம் உலகபாஸ துக்கவாருதி இத்தகையாய் பேதமெயாகிய பாதையிற் செல்ல, செய்கை யென்னுந் துணைவனை நண்ணி பற்றுகளென்னு நகரம்புக்கி துக்கமாகிய பலனைக்காண ஜனன சாகரவாறு விசாலிக்கப்படுகிறது அந்தோ, இத்தகைய துக்கவாருதியை நீந்தும் புணையாம் தஞ்சமின்றித் துஞ்சலுற்றுக் கிடந்தக் கறைபுலகைக் கடப்பான் ஆணவம், காமியம் மலமென்னும் முச்குற்ற ரஹிதனாய் சுந்தர கமன சித்தியைப்பெற்று “இருள் பரந்து கிடந்த மலர்கலி யுலகத்திற்கு விரிகதிர்ச் செல்வனாய்த் தோன்றியவனாகலின்.

"கருமாலை வெவ்வினைகள் காறார நூறிகடையிலா
　　வொண்ஞானக் கதிர்விரித்தா யென்று
மருமாலை நன்னெறியை முன்பயந்தா யென்றுமடியே
　　முன்னடி பரவுமாறறிவ தல்லால்
திருமலே தேனரு மரவிந்தந் திருவணங்கு
　　சேவடியாய் தேவாதிதேவ
பெருமானே நின்பெருமெய் நண்குணரமாட்டார் பிணங்குவார்
　　தம்மெய் வினைப்பிணக் கொழிக்கலாமே."

*　　　*　　　*　　　*

"அருணெறியார் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண்முழுதும் போதிநிழ னன்குணர்ந்த முனிவானற
னருண்மொழியா நல்வாய்மெய் யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாற் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ"

*　　　*　　　*　　　*

"வீங்கோத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டி
தேங்காத முக்குடைக்கீழ் தேவர்பெருமானைத்
தேவர்பெருமானை தேனார் மலர்சிதரி
நாவினவிற்றுதார் வீட்டுலக நண்ணுரே"

என்றவனிமை நீத்தத் தவமிகு புங்கவர் சாற்றிப் போற்று வாராயின ரித்தகைய மூதாறிஞராருளுரையைக் கொண்டாய்ந்துணராமலும் அறியவிரும்பின் நெறியுடன் நசிகின்று வாதியாமலும் தஞ்சித்தஞ் சென்றவாறு அழுக்காறுகளை கற்பனைநிறைந்த புதநூக்குண் மறைந்து கக்கும் உக்ரத்வனி "நூலளவே நுண்ணறிவு" என்பதற் கொக்கத்தக்க தல்லால் சற்சன வித்வர்களால் புகழ்பெற்றேந்துக்கொள்ளு மாற்றலுடைத்தன்று. அன்று அந்தோ பண்டமலைத்தால் சந்தைக்கு வருவது போன்று சதா அந்தர்முகத்திலுள்ள வஞ்சகமுங் கொடூரமும் பொறாமெயும் பொச்செரிப்பும், யாங்களுமோர் வித்வான்களென பஹிர்முகப்பட்டு தர்க்க வியாபரத்திற்கு வருங்கால்:—யோக்கியா யோக்கிய நீசா நீச பூஷண கிரமாக்கிரம மமகார சகப்பிரதிபாஸ வாய்சல்லிய திக்குபுக்குகள் எல்லாம் ஒருங்கேதிரண்டு புலியின்றோல் போர்த்து மேயும் வித்வதடிகள் இவர்களே யென்னு மறிகுறியோடு வெளியாக்குவதை நோக்குந்தலை அந்தோ "ஜணப்பன் வீட்டாரணங்களே; என்றெம்மனோர் வியாகூல சிந்தை யுறுதிரார்.

மருள்:—சௌந்தர்யமுள்ள கன்னிகையைத் தெரிந்துக் கொள்ளுக வென்று அநேக மாதர்களைக் கொணர்ந்து காண்பித்தனும் அந்த கோதம காமமுதிர்ச்சியால் ஓர் வல்லிக்கொடிபோன்றாளைக்காட்டி கைப்பிடித்துக் காமசாகரத்தி லாழ்ந்து பிள்ளையொன்றும் பெற்றுக்கொண்ட. இவரைக் காமதகன னென்றழைப்பது பேதமையிலும், பேதமையன்றோ.

தெருள்:—ஸ்ரீ சித்தார்த்தர் வல்லிக்கொடி போன்றாளைத் தெரிந்துக் கொண்டதும், பிள்ளையொன்றும் பெற்றுக்கொண்டதுமே அவர் காமதகனனற்றென என்னை நியாயமுள. அவியொருவன் "காமதகனன்" எனவெளிவரின் இவர் ஆம் ஆம் என்று பறைசாற்றுவார்போலும். அன்றேல் இயற்கையில் காமநுகர்ச்சியின்றாயின் "காமசேட்டையின்" பலாபலனித்தகையதா மென்றறிந்தகற்ற வேலா தென்பதை நன்குணர்ந்திருப்பரன்றோ.

"தேன்வா யுமிழ்ந்த வமிர்துண்டவன்
போன்று செல்வன்
வான்வாய் வணக்கு நலத்தார்முலைப்
போக வேண்டா
னேனோ நமேத்தவவ னெய்திய
வின்பவெள்ள
மீனோர்க்குரைப்பாம் பதிகத்து
ளியன்றவாறே"

என்பதை யீண்டு கவனிக்கற்பால தொன்றாம். உலகத்திற் றோன்றும் மானவசீவர்களுக்குள் புறப்பொருட்கால மென்றும், அகப்பொருட்கால மென்றும் இருவகையாக முன்னோர்கள் வகுத்திருக்கின்றார்கள். இவற்றுள் அகதேகி விளக்கமாகிய இன்ப நிலைக்கு ஒருதலைக்காமம் அன்புடைக்காமம் பொருந்தாக்காம மென்றும் கூறுப. இவற்றாற் பெறும் ஐம்பொறிகளி னவத்தையை (அதின் பலனாக) சுப்பிரயோகம், விப்பிரயோகம்; சோகம், மோகம், மாணமென்னும் ஐவகைத் துன்பங்களை விளக்கியுள்ளனர் இத்தகைய துன்பசாகரத்தைக் கடக்கப் புணையொன் றவசியமுடைத் தென்றுணர்ந்த சித்தார்த்தர் உலகில் துக்கநிவிர்த்தியைக் கண்டடைந்தவர் ஒருவரு மில்லாதபடியால் "உண்மெயாம், அன்

பினிலையையே பெருக்கி, அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம் பிர்மசரியம், தயை, ஆர்ச்சவம், க்ஷமை, திரிதி, மிதாகாரம், சவுசம், என்னும் பதுதீக்ஷையுற்று, காமமெனும், அவாவையும், காலனெனும் மரணத்தையும் ஜெயித்து, ததாகதமாம், அத்வித புணரியை புக்கினர்,

வாடாப்போதி மரகதப் பாசறை
மரநிழ லமர்ந்தான் நெஞ்சம்
யாவர்க்கு மருளின் றீங்தே நிறைந்து நனிநெகிழ்ந்து
மலரினிமெல்லிய ரென்ப ரதனைக்காமர்செல்வி
மாரன்மகளிர் நெடுமாமழைக் கண்விலங்கி
நிமிர்ந்தெடுத்த வாளும் போழ்ந்திலவாயின்
யாதோ மற்றது மெல்லியவாறே

என்னும் பேரறிஞரின் வலியுறுத்தல் வெள்ளிடை மலைபோல் தெள்ளற ஜ்வாலிக்கின்றதைக்காண்க. இன்னனைய விசாரணையை பசுவினது முனையின்மேல் ஓடித்திரிந்தும் அமுதவழியை அறியாது கடித்து உபத்திரவஞ்செய்யு முண்ணியைப்போன்ற குணபூஷணராகிய, P. N. சுவாமி, அறிந்தொழுக யாதாற்றலுள, அந்தோ, பரிதாபம்.

மருள்:—காமக்கடலி லாழ்ந்து கட்டழகியைக் காட்டி கடிமணம் புரிந்தது மாயையின் சுழற்சியாயிருக்க திருமண காலத்தில் உலக்கை கொழுந்து விட்டுத் தளிர்த்தது என்றெழுதிக் கொண்டு அதை நம்பும் பூரியர்களும் அறிவில் உலக்கைக் கொழுந்தல்லவோ? எவ்வித சக்தியாலிது உண்டாகியதென்று பிறர் கேட்க நேரிடுங்கால் இதற்கியாது கூறுவதென் றாலோசியாது எழுதிய பேதமையே, பேதமை.

தெருள்:—இவ்வித சங்கைக்கு யாதுங்கூற வேலாதென மனப்பால்குடித் தகமகிழ்வது கனவோ, நினவோ? அறியேன், காமாலைக் கண்ணன் கண்டதெல்லாம் மஞ்சளென்பன், என்பதற்கிணங்க இவர் இவ்விதங்கூற துணிந்தார்போலும், அக்காக்ஷிக்குப் பலகியாய மடித்துளது இவர்க்கொருசிறிதும் புலப்படா தொழிந்தது வியக்கற்பாலது. “அகமெய்யருளிய பகவன

176364
600 008.

தாணையிற் பன்மரம் பூர்க்கும், "நற்றனு நல்க நவனைக் கரிதோ" என்னும் ஞானிகளது போக்கறிந்திருப்பின் இவ்விதஞ் சங்கிக்க முனையமாட்டார்:—

"வண்மெலக்கைப்பூந்தார்வளங்கெழுசெந்துளிர்
சேய்வடிவேபோலத்
தண்டளிர்பூம்பிண்டித்தழையோங்கமாமணமுன்
மணந்தோன்யாரே
தண்டளிர்பூம்பிண்டித்தழையோங்கவந்துநம்
பண்டைவினைகழற்றுப்பாங்குபலமொழிந்து
படர்ந்தோனன்றே"

என்னும் பேரறிஞர் பாசுரங்களிற் போதரும் "பிண்டி" யென்னும் பாலிபதத்தின் பொருளை, நற்றூரவர்பால் ஞயமுற சிரவணிப்பரேல் இவ்வித வீண் சங்கைகளைப் புதுக்கமாட்டார்.

மருள்:—ஒருவன் உலகமாயையிற் சிக்குண்ட காலத்தில் (புத்) என்னும் நரகத்தைத் தவிர்ப்பவனுகையால் புத்திரனென்றுகூறும் பதமானது சமஸ்கிருதத்திலிருந்துஞ் சிதைந்துவந்த பாலிபாஷையில் புத்தனென்று வழங்கப்படுதலால் சித்தார்த்தியின் பெற்றோர், குமாரன் போய்விட்டானென அவரது குருவர்க்க சாரதியாலுணர்ந்து, புத்ரனே, புத்ரனே என்னு மர்த்தந்தரும், புத்தாஹோ, புத்தாஹோ, என்று நினைத்தழுது கிடந்தனராக, ஷை சித்தார்த்தன் மீண்டும்வருங் காலையில் புத்ரன் வந்துவிட்டா னென்பதை புத்தன் வந்துவிட்டானென்று வழங்கியதையே யிவருக்கு புத்தனென்று நாளைக்கும் பெயர் வைத்துக் கொண்டாரென்ப.

தெருள்:—சமஸ்கிருத்தி லிருந்துஞ் சிதைந்துவந்தது பாலிபாஷையென்னு மிவர் கூற்றுக்கென்னூ லிடந்தந்ததோ, விபரீதம், விபரீதம் "புத்ரன்" என்னுஞ் சகடபாஷைக்கு பாலியில் "புதல்வன்" என்றேகிடக்க, புத்ரனென்னுஞ் சமஸ்கிருத மொழியே புத்தன் என்றாயதென்னு மிவரதுகூற்று எத்தகைப் பித்தொலியென்ப தெளிதுணர்ப்பாலதாம், இப்பேரறிஞர் "புத்த

கம்" என்பதற்கியா துரைப்பரோ? நிற்க, தமிழ்கடலை யங்கையி லேந்தி யருந்திய, நமது முன்னோர்கள் தத்தமது நூற்களிற் பொதிந்துள்ள பாசுரங்களில்.

"புத்தேளுலகு" "புத்தேளிர்" "புத்தேளீட்டம்" என முழங்கியுள்ள பேருரையின் ஆற்றலை, அன்பர் P. M. சுவாமி போன்றார், என்னபொருள் புதக்கி யுழல்வரோ விளங்கவில்லை. இனியேனும் "சத்திபன்" என்னுஞ் சகடபாஷா மொழியே "புத்தன்" என மகடபாஷையில் கிளத்ததென் றறிதி.

இவரெழுதிய இப்புத்தகத்தின் 8-ம் பக்கம், 4-ம் வரியின், "சாரதிமீண்டும்" என்ற தொடக்கத்தினின்று 9-ம்பக்கம் கடவுள் எனறு சொல்ல தலைப்பட்டார்கள், என்பது வரையிலும், ஆதாரமின்றி தமது மனம் போனவாறு வரைந்துளதா லகற்றினோம்.

மருள்:—தங்களுக்கு மேலான கடவு ளொருவருண்டெனவும் அவரால் தாங்களனுப்பப் பட்டதாகவும் கூறும் விஷயங்களிலுமொத்திராத புத்தமார்க்கத்தைக் கிறீஸ்து வந்ததினால், கிறிஸ்து மதமெனவும், மஹமது வந்ததினால் மஹமது மதமெனவுமிவ்விவகாரத்தி லங்கீகரிப்பதா யிருக்க இதனோடு புத்த மார்க்கத்தையுஞ் சேர்த்து, புத்தர் வந்தார் புத்தமத மென்றெழுதிக் கொள்ளும் பேதையரிற் பேதையரில்.

தெருள்:—புத்ததன்மம் அல்லது, மெய்யறம் புடவியில் பரவிநின்ற எத்தனை நூறு வருடங்களுக்கிப்புறம் விசிரிம்பித்ததென்பதை யிவரறிந்திலர்போலும் (கிறிஸ்து மகமதுமார்க்கம்) ஆயினும் மேலயவிரு மார்க்கங்களைப் பற்றி இவர்மிக்க வக்கரையோடு வுரையாட முனிந்தது எம்மனோர்க்கு மிகுதம் மகிழ்வேயாம். ஆனால் இவ்வளவு நியாயங்களை, கிறிஸ்து, மஹமது, மார்க்கத்திற் கண்டடைந்த நீவிர், கிறிஸ்துவராகவேனும், மஹமதியராகவேனும், அடைக்கலம் புகவேண்டிய அவசியமிருக்க, பொருளற்ற இந்து மதத்திற்கிடந் துழல்வதை நோக்குழி "ஓதுவாரெல்லாம் உரங்குவார் புறக்கடையில்" என்பதற்கு தாங்கள் சிந்

தாமணி யாக்குமோ வென்று மிகுதம் விசனித்தாம், விசனித் தாம்.

"போதி இதழ்கள்

பௌத்த மார்க்கமானது உலகிலுள்ள மதங்களைவிட விசாலமானதும் பழமையானதுமா யிருக்கிறது, பகவனால் போதித்த மார்க்கத்திற்கும் மகடபாஷையில் "தம்மா" என்றும் சகடபாஷையில் "தர்மா" என்றும், திராவிட பாஷையில் "அறம்" என்றுங் கூறப்படும், அவரது சத்திய தன்மம் வாளாயுத மின்றியும் ஒருதுளி இரத்தம் சிந்தாமலும், விருத்தியாகி வருகிறது. பகவன் புத்தர அன்பினாலன்றோ ஆசியாகண்டம் சாந்தத்தை யடைந்தது, ஜீவர்கள் துக்கத்தினின்று விடுபடுவதற்கு பகவன் புத்தபிரானவரே உதாரண புருஷராக விருக்கின்றனர்.

கிரீஸ்தேசத்து விசாரணைப் புருஷர்களாகிய சாக்ரடீஸ் பிளாடோ, அரிஸ்டாட், ஸினோ, அனெக்ஸ்ஸோகோரஸ், ஹிரக்ஸிடஸ், எம்பிடாசிஸ், டெமாக்கிரடஸ், எபிகூரஸ், பிர்ரோ, போன்ற இவர்கள், பகவன் இந்தியாவில் பரிநிர்வாண சாந்தியடைந்த பின்னர், ஏறக்குறைய ஓராம் நூற்றாண்டில் தோன்றினர் பகவன் தோன்றிய பின்னரே இந்திய நாடு நாகரீகமடைந்தது. ஒரு நூற்றாண்டிற்குப் பின் சாக்ரடீஸ், தோன்றி கிரீஸ் நாடு நாகரீகமடைந்தது.

புத்ததன்மம் ஒன்றே பெற்றோராலும் ஆசாரியர்களாலும் கல்வியாளர்களாலும், பிரக்கியாது பெற்றவர்களாலும், பெருங் கூட்டத்தாராலும், பாரம்பரியமாக வழக்கத்தில் வருவதாலும் ஏடுகளில் எழுதினவத்திருப்பதினாலும் ஒருவர் வற்புறுத்திக்கூறுவதினாலும் நம்பவேண்டாம், ஆனால் அவனவன் விசாரணைக்கும் அநுபவத்திற்கும் சரிபட்டுவரின் அதின் பிரகாரம் நட அப்படி நடக்கும்வழி ஒருவருக்கும் பலருக்கும் பலனைத்தருமேல் அதனை நம்பு என்று கூறுகின்றது.

புத்ததன்மம் ஒன்றே பகவனையாவது, அவர் தன்மத்தை யாவது, அவரது சங்கத்தையாவது, வைது புறங்கூறினும் பௌத்தர்கள் கோபங்கொள்ளாமலும், பகவனையாவது, அவ

ரது தன்மத்தையாவது யாவரேனும் புகழ்ந்து பேசினும் ஆனந் தப்படாமல் இருக்கவேண்டுமென்று கூறுகிறது.

புத்ததன்மம் ஒன்றே காட்டிற்சென்று தேகத்தை வருத் திக்கொள்ளாமலும் வீட்டினின்று சிற்றின்பத்தில் தேகத்தைக் கெடுத்துக் கொள்ளாமலும் இரண்டிற்கும சமமாகவிருக்கும் மத்தியபாதையாம் நற்காக்ஷி, நற்சிந்தனை, நல்வசனம், நற்செயல், நல்வாழ்க்கை, நல்லூக்கம், நற்கருத்து, நல்லமைதியாகிய அஷ் டாங்கமார்க்கத்தை வெளியிடுகிறது.

ஓ அன்பின்மிக்கசோதிரர்களே?
சிற்றின்பமார்க்கம்கடிவாளமற்றபுரவிபோன்றது

பேரின்பமார்க்கம், நெருப்பாறும் மயிர்ப்பாலமுமாயது விசாரித்தொழுகலே விவேகப்பிரகாஸமாம்.

"தீவினையை வெல்லும்
அறவாழிதெய் வமஞ்சல்"

சென்னை-600 008
176364

இங்ஙனம்,
G. அப்பாதுரையார்
சாம்பியன் ரீப்ஸ்
K. G. F.